**IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**

**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.20/2020 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.கோபிநாத் |
| Father Name | நடராஜன் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.12.2024.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆற்காடு வட்டம், முப்பதுவெட்டி, காலஸ்திரியான் பேட்டை தெருவில் வசிக்கிறேன். 2014 ம் ஆண்டு நான் சென்னையில் உஷா Fire and Safety ல் தனியார் கம்பெனியில் வேலை செய்தேன். நான் MCA படித்துள்ளேன். வழக்கில் இறந்த நடராஜன் என் தந்தை ஆவார். ஆஜர் எதிரிகள் 7 பேரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் 7 பேரும் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள். 02.03.2014 தேதி எங்கள் ஊரில் தமிழ்நாடு அரசு விலையில்லா பொருட்களை அரசு நடுநிலைப்பள்ளியில் கொடுத்தார்கள். பொருட்களை வாங்க நானும் அங்கு சென்றேன். அப்போது மணிகண்டன் மீது சிலம்பரசன் பைக்கை இடித்ததாக அங்கு சண்டை ஏற்பட்டது. மணிகண்டனை, சிலம்பரசன் அடித்துவிட்டார். அடித்தது சம்மந்தமாக மணிகண்டன் என் அப்பாவிடமும், ராஜேந்திரனிடமும் எங்கள் ஊரில் ஆற்காடில் இருந்து கணியனுர் செல்லும் பஸ் ஸ்டாப் திருப்பத்தில் சொன்னார். என் அப்பா,

வேண்டாம், பேசி முடித்துகொள்ளலாம் என்று சொன்னார். அப்போது சிலம்பரசனின் தரப்பினர் என் அப்பா இருந்த இடத்திற்கு பகல் 2.00 மணிக்கு வந்தார். அந்த இடத்தில் நான், விஜயக்குமார், ரஞ்சித் ஆகியோர்கள் இருந்தோம். பாஸ்கரன், சிலம்பரசன், கண்ணன், சரத், கபிலன், விக்கி, பிரேம் ஆகியோர்கள் வந்தார்கள். அவர்கள்தான் ஆஜர் எதிரிகள் ஆவார்கள். இங்க என்ன Meeting போட்டுக்கொண்டிருக்கிறிர்கள் என்று அவர்கள் திட்டினார்கள். பாஸ்கரன் மற்றும் சிலம்பரன் ஆகியோர்கள் என் அப்பாவை இரும்பு ராடால் தலையிலும், முதுகிலும் அடித்தார்கள். பிரேம் மற்றும் கண்ணனும் முள்கொம்பால் என் அப்பாவின் முதுகிலும், தலையிலும் அடித்தார்கள். சரத், கபிலன், விக்கியும் மூவரும் என் அப்பாவை கைகளால் அடித்தார்கள். பாஸ்கர், சிலம்பரசன் ஆகியோர் ராஜேந்திரனை தலையில் இரும்பு ராடால் அடித்தார்கள். அப்போது நானும், விஜயக்குமார், ரஞ்சித் மூவரும் கத்திக்கொண்டே போய் தடுத்தோம். அதற்குள் என் அப்பா இரத்தம்வந்து, மயங்கி கீழே விழுந்துவிட்டார். பிறகு, என் அப்பாவை உடனே ஆற்காடு அரசு மருத்துவமனை அழைத்துச்சென்றோம். எங்கள் ஊர் ஆட்கள் வந்ததை பார்த்து எதிரிகள் பைபாஸ் சாலை பக்கம் சென்றுவிட்டார்கள். ஆற்காடு அரசு மருத்துவமனையில் என் அப்பாவின் உடல் நிலை மோசமாக உள்ளதாக சொல்லி, வேலூர், அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். என் அப்பாவை நாங்கள் ஆற்காடு அரசு மருத்துவமனையில் சேர்த்த போது மணிகண்டன் த/பெ.குப்புசாமி என்பவர் சிகிச்சையில் இருந்தார். ராஜேந்திரனையும் நான் என் அப்பாவுடன் ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு

அழைத்துச்சென்றேன். பிறகு அங்கிருந்து என் அப்பாவையும்,



ராஜேந்திரனையும் வேலூர், அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அழைத்துச்சென்று சேர்த்தேன். அங்கிருந்து 03.03.2014 அன்று என் அப்பாவை சிகிச்சைக்காக வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் சேர்த்தேன். 10 நாட்கள் என் அப்பா சிகிச்சையில் இருந்தும், சிகிச்சை பலன் அளிக்காமல் 11.03.2014 அன்று மாலை 4.30 மணியளவில் என் அப்பா இறந்துவிட்டார். 12.03.2014 அன்று பிரேத விசாரணை முடிந்து, என் அப்பாவின் சடலத்தை பெற்றேன். 02.03.2014 தேதி மாலை 4 மணியளவில் ஆற்காடு நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். என் அப்பாவையும், ராஜேந்திரனையும் அடிக்க பயன்படுத்திய இரும்பு ராடு மற்றும் முள்வேலி கொம்புகளை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். அந்த இரும்பு ராடுகள் 2 தான் **சா.பொ.1 வரிசை** ஆகும். முள்வேலி கொம்புகள் 2 **சா.பொ.2 வரிசை** ஆகும். வேலூர், நீதித்துறை நடுவர் 3 நீதிமன்றத்தில் நான் வாக்குமுலம் அளித்தேன். கு.வி.மு.ச பிரிவு 164 ன் கீழ் நான் அளித்த வாக்குமூலம் தான் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் –**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**S/d. M.Selvam,**
**I Additional District Judge,**
**Ranipet.**